**இம்புல்பே பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 பெப்ரவரி 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 26 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 22 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இம்புல்பே பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1.24 இன் படி பாதீடு செய்யப்பட்ட எண்ணிக்கை மற்றும் உள்ளபடியான எண்ணிக்கைகள் வெவ்வேறாக புலப்படும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படாதிருந்ததுடன் பாதீடு செய்யப்பட்ட எண்ணிக்கையை விஞ்சாதிருந்தமைக்கு அல்லது மிகைத்திருந்தமைக்கு அவைகள் நிதிக்கூற்றுக்களில் அடிக்குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

I. நிலையான சொத்துக்களை கைப்பற்றுவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட ரூபா 304,462 தொகையான செலவினம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

II. நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவானவை காசுப்பாய்ச்சல் கூற்றின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாக ஆண்டின் போது உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் மீளச் செலுத்தப்பட்ட தொகையான ரூபா 404,528 இற்குப் பதிலாக ஆண்டின் இறுதியில் கடன் மீதியான ரூபா 2,958,835 தொகை பதியப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமுல்படுத்தப்பட்ட வருமான (2/64) விடயத்தின் கீழ் 2013 நவம்பர் மாதம் வரை கிடைத்த மொத்த வருமானமாக ரூபா 475,039 தொகை திசெம்பர் மாதத்தின் போது மீண்டும் பொழிப்பு வருமானப் பதிவேட்டில் பதியப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பெறவேண்டிய வருமானம் மற்றும் முற்பணமாகப் பெறப்பட்ட வருமானம் என்பவற்றை தானித்தனியாக இனங்கண்டு கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் 03 வருமான விடயங்களுக்குரிய ரூபா 147,086 கூட்டுத்தொகையான முற்பணமாகப் பெறப்பட்ட வருமானங்கள் நடைமுறைப் பொறுப்பின் கீழ் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் ஐந்தொகையில் நிலுவை வருமானத்தில் ஈடுசெய்யப்பட்டிருந்தது.

(இ) 15 சந்தர்ப்பங்களின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 293,431 கூட்டுத்தொகையான நீர் செயற்திட்டத்தின் பழுதுபார்த்தல் செலவினம் பிற்போட்ட மூலதனச் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டின் போது கிடைத்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 186,499 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 5,878,832 தொகை திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் அது மீளாய்வாண்டிற்குரிய வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் அத்தொகையினால் அதிகரித்திருந்தது.

(உ) கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 273,576 தொகை வருமானக் கடன்பட்டோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய ஊழியர் கடன்தொகை நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 1,706,193 ஆக இருந்த போதிலும், கடன் பதிவேட்டின் படி அறவிடவேண்டிய ரூபா 2,800 தொகையான இரண்டு கடன் மீதிகள் அந்த மீதியில் உள்ளடக்கப்படாமல் அறவிடவேண்டிய கடன்தொகை அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் அகற்றப்படாத பிரதேச சபைக்குரிய கட்டிடமொன்றிலிருந்து அகற்றப்பட்ட மரங்கள் மற்றும் செவிலி தகரங்களின் விற்பனை செய்வதற்கு மதிப்பிடப்பட்ட ரூபா 35,000 தொகை பிழையாக கட்டிடக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துக்களின் பெறுமதி மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிற்கு சமமாக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 14,855,260 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கணக்கில் காணப்பட்ட மீதியான ரூபா 18,147 தொகையானது ஐந்தொகையில் திரண்ட நிதியத்திலும் ஒதுக்கத்தின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையினால் ரூபா 13,907,962 தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) தேசிய கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1(இ) பந்தி | பொருட்கள் அல்லது சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது கூறுவிலை கோரி சகல வழங்குனர்களுக்கும் சம சந்தர்ப்பம் வழங்கி பொருத்தமான வழங்குனரைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக தனியார் நிறுவனத்திற்கு நிர்ப்பம்பிகளை பழுதுபார்ப்பதற்காக 11 சந்தர்ப்பங்களின் போது ரூபா 230,480 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதி IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கொள்வனவு செய்யப்பட்ட கணனி மற்றும் உபபாகங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பராமரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட ரூபா 258,118 தொகையான கணனிகள் மற்றும் உபபாகங்கள் தொடர்பாக அவ்வாறான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104(1) | 2011 யூலை 10 ஆந் திகதி சபைக்குச் சொந்தமான 252 - 6347 ஆம் இலக்க கெப் வாகனம் விபத்திற்குள்ளாகி ஏற்பட்ட ரூபா 304,700 தொகையான நட்டம் தொடர்பாக பூரண அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,846,670 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,316,007 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,162,677 தொகையான வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த மீண்டெழும் வருமானம் ரூபா 5,030,600 இனால் குறைவடைந்தமையும் செயற்பாடுகள், உபகரணம் மற்றும் மூலதனச் சொத்துக்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பிற்காக ஏற்பட்ட செலவினம் முன்னைய ஆண்டை விட ரூபா 1,612,091 இனால் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 110,745 | 102,809 | 72,207 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 825,000 | 75,458 | 70,420 |
| நீர்க் கட்டணம் | 4,500,000 | 9,125,836 | 3,617,911 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிற்காக நிலுவையாக இருந்த நீர்க்கட்டணம் ரூபா 1,512,332 ஆகும். அது மொத்த நிலுவை நீர்க்கட்டணத்தில் 41 சதவீதமாகும்.

(ஆ) 2012 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிற்காக நிலுவையாக இருந்த ஆதனவரி ரூபா 46,711 ஆக இருந்ததுடன் அது நிலுவை ஆதன வரியில் 64 சதவீதமாகும்.

(இ) 2011 யூன் முதல் 2012 யூன் வரையிலான காலத்திற்கிடையே அறவிடவேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் அறவிடப்பட்ட முத்திரைக் கட்டண வருமானத்திற்கிடையே ரூபா 401,400 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஈ) புதிய நீர் இணைப்புக்ககைளப் பெற்றுக்கொள்ளும் போது மானிக் கட்டணமாக அறவிடப்படுகின்ற ரூபா 7,500 தொகை நீர் இணைப்பைப் வழங்குவதற்கு முன் அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2009 ஆம் ஆண்டு முதல் நீர் இணைப்பை வழங்கிய இடங்களிலிருந்து ரூபா 529,663 தொகையான நிலுவை மானிக் கட்டணம் அறவிட வேண்டியிருந்தது.

(உ) 2012 நவம்பர் மாதம் முதல் 2013 செப்தெம்பர் வரை அறவிட வேண்டியதாக இனங்காணப்பட்ட ரூபா 5,567,190 தொகையான முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ஏக்கர் வரிப் பெறுமதி ரூபா 299,685 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 177,125 தொகை அதாவது 59 சதவீத அளவு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட பழையதாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் போது 06 சந்தர்ப்பங்களில் ரூபா 236,285 கூட்டுத்தொகையான பணம் இயந்திரத்தை வாடகைக்குப் பெறல் மற்றும் நிர்மாணப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக றத்மலவின்ன பலாங்கொடை முகவரியில் அமைந்துள்ள A.I.T.C என்டர் பிறைசஸ் என்ற பெயருடைய நிறுவனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இந்தக் கொடுப்பனவு தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

கொடுப்பனவு உறுதிச்சீட்டுடன் இணைக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் குறிப்பிடப்பட்ட 071083627 மற்றும் 045-2286219 என்ற தொலைபேசி இலக்கங்கள், பிரதேச சபை நிதியத்திலிருந்து பட்டியல்களை மீளளிப்புச் செய்கின்ற தலைவரின் பிரத்தியேக தொலைபேசிகளுக்கிடையே அந்த தொலைபேசிகளின் பட்டியல்கள் மீளளிப்பிற்காக 2012 சனவரி மாதம் முதல் 2013 நவம்பர் மாதம் வரை ரூபா 69,000 தொகை பிரதேச சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. அந்தக் கொடுப்பனவின் பிரகாரம் மேற்கூறப்பட்ட வழங்கல் மற்றும் சேவைகளுக்காக தலைவர் நேரடியாக முன்னின்றமை அவதானிக்கப்பட்டது. இதன் பின்னர் இந்த நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்படமாட்டாதென தலைவர் 2014 செப்தெம்பர் 09 ஆந் திகதி எனக்கு அறிவித்திருந்தார்.

(ஆ) மின்சார உற்பத்திக்குரிய தனியார் கம்பனியொன்றுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனை IV இன் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்ற ஒரு அலகு மின்சாரத்திற்காக செலுத்தப்படுகின்ற தொகை சுற்றாடலைப் புத்துயிரளிப்பதற்கான நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் ஆரம்பம் முதல் 2013 யூன் மாதம் 30 வரை கிடைத்த ரூபா 1,940,585.85 தொகை அவ்வாறு நிதியத்திற்கு செலவு வைக்கப்படாது 2/64 வருமானத் தலைப்பின் கீழ் பிரதேச சபை நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு செலவிடப்பட்டிருந்தது.

## 3.2 செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) அளுத்துவர குடிநீர் செயற்திட்டத்தில் மின்சார மோட்டாரில் மின்சாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பொருத்தப்பட்ட பெனல் முறைமை செயற்பாடற்றமையின் காரணமாக அதனைப் பழுதுபார்ப்பதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு 2011 திசெம்பர் 16 ஆந் திகதி ரூபா 70,000 முற்பணமொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2014 யூன் 02 ஆந் திகதி வரையிலும் பெனல் முறைமை பழுதுபார்க்கப்பட்டு மீளக் கையளிக்கப்படாதிருந்ததுடன் தாமதம் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முற்பணமாக வழங்கப்பட்டு தீர்க்கப்படாதுள்ள கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 5,056,213 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,866,459 தொகை அதாவது 57 சதவீதம் 5 வருடங்களை விட பழையதாகும்.

(இ) நீர்மின் உலையொன்று தொடர்ச்சியாக செயற்படுத்தப்படுகின்ற போது உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சார அலகுகள் (K.W.H) தனித் தன்மையுடையதாக இருக்கவேண்டும். எவ்வாறாயினும் சபையுடன் உடன்படிக்கை செய்த மின்சக்தி உற்பத்தி நிறுவனத்தின் அறிக்கையின் படி மின்சார உற்பத்தியில் அதிகளவான முரண்பாடுகள் காணப்பட்டதுடன் பெறப்பட்ட வருமானத்திலும் முரண்கள் காணப்பட்டது. நிறுவனத்தினால் கணிக்கப்பட்டு அனுப்படுகின்ற வரித் தொகை வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் கிடைக்கவேண்டிய குறித்த வருமானம் கிடைத்ததா எனக் கண்டறிவதற்கு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

உள்ளூராட்சி ஆணையாளரின் (சப்ரகமுவ) 2010 செப்தெம்பர் 23 ஆந் திகதிய CLG 764 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆவது பந்தியின் பிரகாரம் ஏதாவது உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவர், பிரதித் தலைவர் அல்லது உறுப்பினரொருவர் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டால் உரிய அமைப்பு அல்லது வெளிநாட்டு அரசாங்கம் அல்லது வெளிநாட்டு நிறுவனம் அதற்காக செலவாகின்ற சகல செலவினங்களையும் மேற்கொள்ள வேண்டியிருந்தமையும் அதற்காக அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் அல்லது உள்ளூராட்சி

நிறுவனத்தின் பணம் ஈடுபடுத்த முடியாதிருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த ஆலோசனைகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது 6 நாட்கள் தாய்லாந்து சுற்றுலாவிற்காக சபையின் 04 மக்கள் பிரதிநிதிகளுக்காக சபை நிதித்திலிருந்து ரூபா 360,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 3.4 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---

(அ) சபைக்குரிய கொங்கிரீட் கலவை பெறப்பட்ட திகதி முதல் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்கத்தின் வழங்கல் மற்றும் ஆலோசனைச் சேவைப் பிரிவிலிருந்து சபைக்குக் கிடைத்த 53 - 5630 ஆம் இலக்க கெப் வாகனம் சபை வளவில் துருப்பிடித்துக் காணப்பட்டதுடன் அது மோட்டார் போக்குவரத்து ஆணையாளரின் மூலம் முறையான பிரகாரம் சபைக்குக் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிக்கவில்லை.

### 3.5 பதவியணியினர் நிருவாகம்

---

சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 02 வருமானப் பரிசோதகர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் உரிய பதவிகளில் வேலைகளைக் கவனிக்கும் துறைகள் தொழிலாளர் ஒருவருக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு